# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**STC.No.98/2024**

Deposition of Witness of PW7

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரபாகரன் | Calling | : |
| Father/Husband's Name | : கணபதி | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 12th May 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் 2023ம் வருடம் மொடக்குறிச்சி காவல்நிலையத்தி உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது கும்பகோணத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 17.08.2021 ம் தேதி நான் மொடக்குறிச்சி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது மொடக்குறிச்சி காவல்நிலைய குற்ற எண். 206/2021 சட்டபிரிவுகள் 279, 337 இதச பிரிவின் கீழ் முதல் புலன் விசாரணை முடித்து தொடர்புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பிரகாசம் என்னிடம் ஒப்படைத்த வழக்க கோப்பினை நான் பெற்றேன். ஏற்கனவே 06.09.2021 ம் தேதி விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனமான TN 33 BP 6757 என்ற வாகனத்தை கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்வுக்கு உதவி ஆய்வாளர் பிரகாசம் அனுப்பி வைத்துள்ளார். 07.01.2022 ம் தேதி இருசக்கர வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் கதிர்வேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 10.02.2022ம் தேதி தொடர்புலன் விசாரணைக்காக எடுத்துக் கொண்டு அன்றே காயம் பட்ட நபர் ஓட்டி சென்ற TN 34 P 8353 என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்தேன். 11.02.2022 ம் தேதி இருசக்கர வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் சிவக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காயம்பட்ட குமாருக்கு சிகிச்சை அளித்த ஈரோடு அரசு மருத்துவமனை மருத்துவர் சோமேஸ்வரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். **காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.05.12 17:16:35 +0530

3. மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதழின் அடிப்படையில் சட்ட பிரிவுகளை 279, 337 இதச பிரிவில் இருந்து 279,338 ஆக இதச பிரிவாக மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு எனது புலன்விசாரணை முடித்து ஆஜர் எதிரி மீது வழக்கின் புலன் விசாரணை முடித்து இதச பிரிவு 279, 338 ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பட்டியல் சாட்சிகளை யாரிடமும் தனியாக விசாரித்து மறு வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் தயார் செய்த ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் தொடர்புலன் விசாரணை மேற்கொண்டேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்று எவ்வித விசாரணையும் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தொடர்புலன்விசாரணையில் மேற்படி சம்பவமானது சோலார் டூ முத்தூர் செல்லும் மாநில நெடுஞ்சாலை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தான் சானார் மேடு பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான்.

2. சோலார் டூ முத்தூர் செல்லும் சாலையில் சானார்மேடு பேருந்து நிறுத்தம் அமுதம் பஞ்சாபி காம்பவுன்டு சுவர் வரை சாலையில் தடுப்பான் உள்ளது என்றால் விபத்தின் போது இல்லை. மேறப்டி சாலையின் அகலம் எவ்வளவு என்றால் சுமார் 30 அடி அகலம் இருக்கும்.மேற்படி சாலையில் இடதுபுறத்தில் ஒரு வாகனம் செல்வதற்கும், வலது புறம் ஒரு வாகனம் செல்வதற்கு எவ்வித இடையூறும் இருக்காது என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்ட நபருக்கு ஓட்டுனர் உரிமம் மற்றும் வாகனத்திற்கான காப்பீடு மற்றும் வாகனத்திற்கு பதிவு சான்றிதழ் இல்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர் தான் முத்தூர் டூ ஈரோடு செல்லும் சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வலதுபுறமாக வந்து நின்று கொண்டிருந்த பேருந்திற்கும் முன்பாக இடதுபுறம் செல்ல வேண்டி சாலை விதிகளை முறையாக பின்பற்றாமல் கவனக்குறைவாக சாலையை கடந்த போது தான் விபத்து சம்பவம் நடைபெற்றது என்றால் சரியல்ல.

3. புகார்தாரர் விபத்து இழப்பீடு பெறவதற்காக கொடுக்கப்பட்ட பொய்யான புகாராருக்கு ஆதரவாக உண்மை சம்பவத்தை மறைத்து எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரியல்ல. சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும், வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.05.12 17:16:40 +0530